செ.வெ.எண்.330 நாள்.21.05.2018

**பார்வையற்ற பட்டதாரிகளுக்கு இலவச ஆசிரியர் தகுதி தேர்வு பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன-**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பார்வையற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்விற்கான இலவச பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இது குறித்த செய்திக்குறிப்பில் மாவட்ட ஆட்சியர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளதாவது.

திருநெல்வேி மாவட்டத்தில் ஆசிரியர் பட்டப்படிப்பு (B.Ed) மற்றும் பட்டையப்படிப்பு (D.T.Ed) முடித்த **பார்வையற்ற மாற்றுத்திறனாளி பட்டதாரிகளுக்கு** அரசு நடத்தும் ஆசிரியர் தகுதிதேர்வான (TET)-க்கு பயிற்சி வகுப்புகள் இலவசமாக நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைய விரும்பும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் தங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் கல்விச்சான்றிதழ்களுடன் "**மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட ஆட்சியரக வளாகம், திருநெல்வேலி- தொலைபேசி எண்: 0462-250157)**" என்ற முகவரிக்கு தங்களது விண்ணப்பத்தினை நேரிலோ அல்லது தபாலிலோ 29.05.2018க்குள் விண்ணப்பித்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி